நீதிமன்றத்தில் அனைத்து கதவுகளும், ஜன்னல்களும், மூடப்பட்டு அ.சா.1 அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர், பெஞ்ச்கிளார்க், தட்டச்சு செய்யப்படுபவர் தவிர மற்ற அன்னிய நபர்களோ போலீசாரோ இல்லாமல் மூடிய நீதிமன்றத்தில் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

(சாட்சி, உயிர்பிழைத்தவரின் பெயர் அடையாளத்தை கூறினார், சாட்சியின் பெயர் அடையாளம் வெளிப்படுத்தக்கூடாது என்ற காரணத்தினால் வரிசை எண் பதிவு செய்யப்படுகிறது.)

<u>அமர்வு வழக்கு எண். அ.சா. நாள் 03.12.2021</u>

சாட்சி மீண்டும் மனுவின்பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

<u>சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிவழங்கப்பட்டது.</u>

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், அந்த விசாரணையில்,

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.254-2018

Deposition of witness No. for Prosecution / Defence / Court

Name :திரு.செல்வராஜ் அ.சா.12 LW.14

Father's Name : பாலகிருஷ்ணன்

Village : மேட்டுச்சேரி கிராமம்

Taluk : திருக்கோவிலூர் தாலுக்கா

Caste :

Calling :

Religion :

Age : 49

Time : 11.00 am - 11.12 am

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 03rd day December 2021.
03.12.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் 10 வருடமாக சென்னையில் வசித்து வருகிறேன். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரி எங்கள் வீட்டிலிருந்து 5 வீடு தள்ளி அவர் வீடு உள்ளது. அவர் பக்கத்து 5வது வீடு என்பதால் எதிரியின் மனைவியை தெரியும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சாட்சியம் அளிக்க போலீசார் தெரிவித்ததால் சாட்சியம் அளிக்க வந்தேன்.

சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிவழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், அந்த விசாரணையில், ரீனா இறந்தது

குறித்து கேள்விப்பட்டேன். எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. இறப்பிற்கு நான் போகவில்லை. ஆஜா் எதிரிக்கும், அவா் மனைவி ரீனாவிற்கும் அடிக்கடி சண்டை வரும் என்றும், அவா் மனைவியிடம் 5.6.2018ம் தேதி மாலை 4 மணியளவில் ரமேஷ் அவா் வீட்டிற்குள் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தாா் என்றும், அப்போது அவா் 2வது மகன் அருணாசலம் இருந்தாா் என்றும், அப்போது அவா் மனைவி ரீனா ஏன் என்னை அசிங்கமாக திட்டி சண்டை போடுகிறாய் என்று கேட்டாா் என்றும், நாங்கள் வழக்கமாக நடக்கும் சண்டை என்று நாங்கள் இருந்துவிட்டோம் என்றும், அவரது 2வது மகன் அருணாச்சலம் அப்பா அம்மாவை மண்ணெண்ணை ஊற்றி கொளுத்திவிட்டாா் என்று கத்திக்கொணடு வெளியில் வந்தாா் என்றும், அவா் பின்னால் அவா் மனைவி அணிந்திருந்த துணியில் தீப்பிடித்தவாறு அலறி அடித்து வெளியே வந்தவா் தன் கணவா் தன் மீது மண்ணெண்ணை ஊற்றி கொளுத்திவிட்டாா் என்று காப்பாற்றுங்கள் என்று கத்தினாா் என்றம், உடனே ராஜீயும், அவா் மனைவியும் ரீனா மீது தண்ணீரை ஊற்றி அதைணதாா் என்றும், அங்கிருந்த ரமேஷ் 108 ஆம்புலன்சு மூலமாக திருக்கோவிலூா் அரசு மருத்துவமனைக்கு ரீனாவை சிகிச்சை அழைத்து சென்றாா் என்றும், நாங்கள் ஏண்டா படுபாவி இந்த பெண்ணை கொளுத்திவிட்டாயே என்று கேட்டோம் என்றும், அவன் பேசாமல் ரீனாவை ஆஸ்பிடடலுக்கு கூட்டிக்கிட்டு போனாா் என்றம், ராஜீ ரீனாவின் அப்பா ரத்தினவேலுக்கு செல்போன் மூலம் ரீனாவை ரமேஷ் மண்ணெண்ணை ஊற்றி கொளுத்திவிட்டதை தெரிவித்தாா் என்றும், இது சம்மந்தமாக ரீனா கொடுத்த வாக்குமூலத்தில் மணலூா்பேட்டை போலீசாா் வழக்கு பதிவு செய்தாா்கள் ஏ்னறும், தீக்காயம் அடைந்த ரீனாவை அவா் அப்பா ரத்தினவேல், அவா் அம்மா உண்ணாமலை திருக்கோவிலூா் மருத்துவமனையிலிருந்து முண்டியம்பாக்கம் 6.6.2018ம் தேதி பகல் சோ்த்தா்ாகள் ஏ்னறும், அங்கு சிகிச்சையில் இருந்த 11.6.2018ம் தேதி ரீனா காலையில் 6.45 மணிக்கு இறந்துவிடடாா் என்றும், இறந்துபோன ரீனா அவா் அப்பா வானாபுரத்திற்கு எடுத்து சென்று அடக்கம் செய்தாா் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. தற்போது எதிரி எங்கள் ஊரைச்சோ்ந்தவா் என்பதால் அவரை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞா் ஆஜா், குறுக்கு விசாரணை

எனக்கு சம்பவம் பற்றி எநத விவரமும் தெரியாது என்றால் சரிதான். இந்த சம்பவம் பற்றி நான் சென்னையில் இருக்கும்போது கேள்விப்பட்டேன். ரீனா ஸ்டவ் வெடித்து இறந்துவிட்டதாக கேள்விப்படடேன் என்றால் சரிதான்.

நீதிமன்ற கேள்வி?

யாா் அவ்வாறு சொன்னாா்கள் என்றால் நிறைய போ் சொன்னதால் யாா் என்று தெரியாது.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.150-2018

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | |
|---|---|
| Name | :திரு.அண்ணாதுரை அ.சா.8 LW.9 |
| Father's Name | : சுப்பிரமணியன் |
| Village | : கிழக்கு தெரு, சின்னசெட்டிப்பாளையம் கிராமம் |
| Taluk | : கள்ளக்குறிச்சி |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 50 |
| Time | : 11.17 am – 11.30 am |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 03rd day December 2021.
03.12.2021
முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் வீட்டிற்கு எதிர் வீட்டில் வசிக்கிறார். தேதி நினைவில்லை, சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 6 மணியளவில் என் சித்தி அஞ்சலையை ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தில் உட்கார வைத்துக்கொண்டு போனார். அதன்பிறகு அஞ்சலை திரும்பி வரவில்லை. எரவளம், கச்சிக்குப்பம், அரும்பாக்கம், கனகனந்தல் ஆகிய கிராமங்களுக்கு போய் பணம் வாங்கி தருகிறேன் என்று சொல்லி ஆஜர் எதிரி அஞ்சலையை இருசக்கர வாகனத்தில் அமர வைத்து அழைத்து சென்றார். அஞ்சலை மீது கல்லை தூக்கிப்போட்டுவிட்டார் என்று கேள்விப்பட்டு காவல்நிலையம் போனேன். காவல்நிலையத்திற்கு நாங்கள் 10 பேர் போனோம். ஆஜர் எதிரி காவல்நிலையத்தில் இருந்தார். அங்கு நான் கையெழுத்து

போட்டேன். என் வீட்டிலிருந்து 8 மணிக்கு காவல்நிலையம் போனேன். அஞ்சலையை பாண்டிச்சேரிக்கு எடுத்து சென்றார்கள். அங்கு இறந்துவிட்டார். பாண்டிச்சேரிக்கு மாலை 5 மணிக்கு நானும் போனேன். போஸ்ட்மார்டம் செய்து கொடுத்தார்கள். அதன்பிறகு அஞ்சலையின் பிரேதத்தை வாங்கி வந்து அடக்கம் செய்துவிட்டோம். பாண்டிச்சேரி மருத்துவமனைக்கு திருக்கோவிலூர் காவல்நிலையத்திலிருந்து போலீசார் அழைத்து சென்றார்கள். மருத்துவமனையில் போலீசார் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை</u>

9.12.2017ம் தேதி இரவு 8 மணிக்கெல்லாம் நாங்கள் காவல்நிலையம் போய்விட்டோம் என்றால் சரிதான். நாங்கள் சுமார் 10 பேர் போனோம். நாங்கள் 10 பேரும் கையெழுத்து போட்டோம். நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் இறந்தது என் சித்தி தான், சம்பவம் நடந்த இடத்திற்கு நான் நேரடியாக போகவில்லை, சம்பவம் நடந்ததை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அஞ்சலை அடிப்பட்ட பிறகு இரவு 8மணிக்கு காவல்நிலையம் போனோம். அதன்பிறகு நான் காவல்நிலையம் போகவில்லை. அதன்பிறகு அஞ்சலை இறந்துவிட்டார் என்று போலீசார் எங்களை அழைத்து சென்றார்கள். அஞ்சலை காணாமல் போன அன்று காவல்நிலையத்திற்கு போனேன், அதன்பிறகு நான் காவல்நிலையம் போகவில்லை. இந்த சம்பவத்தை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கு மட்டும் நான் போகவிலலை. புகார் கொடுக்க போனேன், போஸ்ட்மார்டத்திற்கு போனேன். சாட்சிகள் எல்லாம் எனக்கு தெரிந்தவர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்தவர் என் சித்தி. போலீசார் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.150-2018

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | :திரு.பூவரசன் | அ.சா. 9 LW.10 |
| Father's Name | : நடராஜ் | |
| Village | : கிழக்கு தெரு, சின்னசெட்டிப்பாளையம் கிராமம் | |
| Taluk | : திருக்கோவிலூர் தாலுக்கா | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : 28 | |
| Time | : 12.05 pm - 12.19 pm | |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 03rd day December 2021.
03.12.2021
முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் செண்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சிங்காரவேல், சாட்சிகள் சந்திரசேகர், பரசுராமன், மணி, வேல்முருகன், மாதவன், அண்ணாதுரை ஆகியோர்களை தெரியும். அவர்கள் எங்கள் நிலத்திற்கு பக்கத்தில் உள்ளவர்கள், எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரி, என் மாமியார் வசந்தா வீட்டிற்கு எதிர் வீட்டில் வசிப்பவர். பரசுராமன் செண்ட்ரிங் சாமான்கள் வைத்து சொந்தமாக வைத்து செண்ரிங் வேலை செய்து வந்தார். ஆஜர் எதிரி சரத்குமார் அவருடன் வேலை செய்து வந்தவர். அப்போது பரசுராமனக்கு இங்கு வேலை செய்வது கஷ்டமாக இருக்கிறது என்று சென்னைக்கு வேலைக்கு போய்விட்டார். இங்கு இருந்த செண்ட்ரிங் வேலை சம்மந்தப்பட்ட பொருட்களையும், வேலையையும் ஆஜர் எதிரியிடம் ஒப்படைத்துவிட்டு போனார். வேலை செய்ததற்கு வரவேண்டிய பாக்கி பணத்தை எல்லாம் வாங்கி தனது அப்பா, அம்மாவிடம் கொடுக்கும்படி கூறிவிட்டு சென்றார். தேதி ஞாபகமில்லை. சுமார் 4 வருடத்திற்கு முன்பு

ஒரு நாள் மாலை 6 மணிக்கு எதிரி சரத்குமார் போய் அ.சா.1 சிங்காரவேலுவை அழைத்தார். சிங்கராவேலு தனக்கு உடம்பு சரியில்லை, பாட்டியை அழைத்து செல் என்று கூறியுள்ளார். பாட்டி பெயர்அஞ்சலை. மாலை 6 மணிக்கு டூவிலரில் அஞ்சலையை ஆஜர் எதிரி உட்கார வைத்துக்கொண்டு அழைத்து சென்றார். ரொம்ப நேரம் ஆனவுடன் அஞுசலை திரும்பி வரவில்லை என்று தேடிக்கொண்டு போனோம். நாங்கள் எல்லோரும் தேடிக்கொண்டு போனபோது, பெருமாள் என்பவரது கொல்லிக்கு பக்கத்தில் இருக்கும் பள்ளத்தில் அடிப்பட்டு தலையில் கல்லுடன் அஞுசலைஅம்மாள் கீழே கிடந்தார். முருகதாஸ் என்பவர் 108 ஆம்புலன்சிற்குபோன் செய்தார். அஞ்சலை அம்மாளை ஏற்றிச்சென்று திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு முடியாது என்று சொல்லி மேல்சிகிச்சைக்காக பாண்டிக்கு எடுத்து சென்றார்கள். பிறகு 4 நாட்கள் கழித்து காலை 7 மணிக்கு இறந்துவிட்டார் என்று தகவல் சொன்னார்கள். அதன்பிறகு நாங்கள் எல்லோரும் கிளம்பி போனோம். ஜிப்மர் மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்யும் இடத்திற்கு போனோம். போலீஸ் அங்கு வசாரணை செய்தார்கள். அதன்பிறகு பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை வாங்கி வந்து நல்லடக்கம் செய்தோம். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை</u>

போலீஸ் விசாரணையில் எனது தாத்தா சிங்காரவேல் என்று சொன்னேன். இறந்துபோனவர் என் பாட்டி என்று சொன்னேன் என்றால் சரிதான். சிங்காரவேலு எனது தாத்தா என்றால் சரிதான். முருகதாஸ் எனக்கு சொந்த மாமா. என் பாட்டி 7 மணிக்கு காணவில்லை என்று சொன்னார். நான் காவல்நிலையம் போகும்போது இரவு 8 மணி இருக்கும். காவல்நிலையத்தில் 8 மணிக்கெல்லாம் கையெழுத்து போட்டேன். சம்பவ இடத்திற்கு நானும் போனேன். சம்பவ இடத்திற்கு சுமார் 7.30 மணிக்கு போனேன். என் பாட்டி காணாமல் போன அன்று இரவு 7.30 மணிக்கு பாட்டி கிடந்த இடத்திற்கு போய்விட்டேன். நான் போவதற்கு முன்பாக சம்பவ இடத்தில் ஆட்கள் இருந்தார்கள். உடனே அரைமணி நேரத்தில் ஆம்புலன்சு வந்துவிட்டது. 8, 8.30 மணிக்கெல்லாம் ஆம்புலன்சு வந்தது. அதன்பிறகு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு தெரியாது. அவர் இறந்தபிறகு தான் மருத்துவமனைக்கு போனேன். காவல்நிலையத்தில் கையழுத்து போட்டபிறகு பிரேத பரிசோதனை செய்த அன்று மருத்துவமனையில் போலீசார் விசாரித்தார்கள். சம்பவம் நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது. இறந்தவர் என் பாட்டி என்றும், அ.சா.1 என் தாத்தா என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.150-2018

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | :திரு.சரவணன் | அ.சா.10 LW.15 |
| Father's Name | : தனசேகர் | |
| Village | : மாரியம்மன்கோவில் தெரு, கீழத்தாழனூர் கிராமம், | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : 33 | |
| Time | : 12.19 pm - 12.28 pm | |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 03rd day December 2021.
03.12.2021
முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 10.12.2017 அன்று நான் கீழத்தாழனூர் பஸ்டாப்பில் சுமார் 1.30 மணியளவில் நானும், சுரேஷ்குமாரும் நின்றுகொண்டிருந்தோம். போலீசார் வந்து என் முன்னிலையில் ஆஜர் எதிரியை கைது செய்தார்கள். நானும், சுரேஷ்குமாரும் அருகில் போனோம். ஆஜர் எதிரியை போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். எங்கிருக்கிறது கல் என்று போலீசார் கேட்டார்கள். எரவளத்தில் உளுத்தங்கொல்லையில் புதரில் கல் இருக்கிறது என்று சரத்குமார் சொன்னார். சரத்குமார் கல்லை எடுத்து காட்டினார். அதை போலீசார் எங்கள் முன்னிலையில் பெற்றுக்கொண்டார்கள். என்னையும், சுரேஷ்குமாரையும் கையெழுத்து போடச்சொன்னார்கள். நான் ஒரு கையெழுத்து போட்டேன். அந்த கல்லை பார்த்தால் அடையாளம் தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல்

வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ளது என்னுடைய யைெழுத்து அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசரில் 2வதாக உள்ளது என்னுடைய கையெழுத்து. அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் சுரேஷ்குமாரும் கையெழுத்து போட்டார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கல்லை தான் பார்த்தேன். அந்த கல் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை

என்னுடைய சொந்தஊர் கீழத்தாழனூர், நான் விவசாய வேலை செய்து வருகிறேன். காவல்நிலையத்திற்கு நான்போகவில்லை. காவல்நிலையத்திற்கு என்னை வரச்சொல்லவில்லை. எரவளத்தில் உளுத்தங்கொல்லையாண்ட கையெழுத்து போட்டேன். உளுத்தங்ககொல்லையில் புதர் இருநுதது. ரோடு இருந்தது, ரோட்டிற்கு பக்கத்தகில் காவல்வாய் இருந்தது. புதரிலிருநுது கல்லை எடுத்துக்கொடுத்தார். ஒரு கல்லை தான் எதிரி எடுத்து கொடுத்தார். காவல்நிலையத்தில் 2 கல்லை என்னிடம் காண்பித்தார்கள் என்றாலும், காவல்நிலையத்தில் வைத்துதான் 2 கையெழுத்தும் போடடேன் என்றாலும், அங்கு வைத்து தான் கல்லை பார்த்தேன் என்று சொல்வதும் சரியல்ல. ஒரு கல்லை தான் பார்த்தேன். உளுந்துகொல்லை பெருமாள் என்பவருக்கு சொந்தமானது. நாங்கள் அங்கு போகும்போது பெருமாள் அங்கு இல்லை. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும், காவல்நிலையத்தில்வைத்து கையெழுத்து போட்டேன் என்றாலும், எதிரியிடம் எந்த வாக்குமூலமும் வாங்கவில்லை என்று சொல்வது சரியல்ல. அந்த கல் 9 கிலோ வருமா என்றால் வரும். அந்த கல் 9 கிலோ வராது என்று சொல்வதும், பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொல்வதும் சரியல்ல.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

Name :திரு.வெங்கடேசன் அ.சா.9 LW.12

Father's Name : ஆறுமுகம்

Village : மாரியம்மன்கோவில் தெரு, மேல்தேரடிக்குப்பம், தீவனூர் போஸ்ட்,

Taluk : திண்டிவனம் தாலுக்கா

Caste :

Calling :

Religion :

Age : 44

Time : 12.42 pm – 12.55 pm

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 03rd day December 2021.
03.12.2021
முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் திண்டிவனம் சந்தைமேட்டில் உள்ள வளைவில் டீக்கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எல்லா வண்டியிலும் வருபவர்கள் வந்து வழி கேட்பார்கள். தற்போது 12 மணி நேரம் வைக்கிறோம். அப்போது எங்கள் கடை 24 மணிநேர கடை. 11.1.2017 அன்று இரவு 7 மணியளவில் செஞ்சி மார்கமாக வந்த ஒரு கார் வந்து ஓரமாக நின்றது. அவர்கள் வழி கேட்க நிற்கிறார்கள் என்று நினைத்து நான் வெளியில் வந்தேன். நின்ற கார் வசந்தவாசி பக்கம் நோக்கி கிளம்ப தொடங்கிவிட்டது. அதில் 3 ஆண்களும், ஒருபெண் உடல்நிலை சரியில்லாத மாதிரி சாய்ந்து இருந்தார். அந்த கார் வந்தவாசி மார்க்கமாக போய்விட்டது. நான் கடைக்குள் வந்துவிட்டேன். அதன்பிறகு 10,15 நாட்கள் கழித்து ஏரிக்கரைகிட்ட

ஒரு பெண் பிரேதம் அழுகிய நிலையில் கிடப்பதாக என் கடையில் மற்றவர்கள் நின்று பேசிக்கொண்டார்கள். நான் போய் பார்க்கவில்லை. அந்த கார் நம்பர் அப்போது நினைவிருந்தது, தற்போது நினைவில்லை. அந்த கார் வெள்ளைகலரில் இருந்தது. போலீசார் வந்து விசாரித்தார்கள், நான் மேலே சொன்ன விவரத்தை சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தற்போது கூறிய விவரத்தை போலீஸ் விசாரிக்கும்போதும் சொன்னேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை எந்த நேரத்தில் விசாரணை செய்தார்கள் என்று நினைவில்லை. சுமார் 10 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். திண்டிவனம் - வந்தவாசி, காஞ்சிபுரம் போகக்கூடிய பிரதான சாலை என்றால் சரிதான். வசந்தவாசி, காஞ்சிபுரம் மார்க்கமாக வரும் பஸ், லாரி போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். திண்டிவனத்திலிருந்து, திருவண்ணாமலை, செஞ்சிக்கு போகும் பஸ், லாரிகளும் வரும் என்றால் சரிதான். நான் பார்க்கும்போது அந்த கார் திருவண்ணாமலை மார்கத்திலிருந்து வந்து வந்தவாசி மார்க்கமாக திரும்பியது. அப்படி போகும்போது தான் நான் பார்த்தேன். அதன்பிறகு நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசாரிடம் இதற்கு முன்பு சாட்சியம அளித்தேனா என்றால் இரண்டுவழக்குகளில் என்னை சாட்சியாக அழைத்தபோது என்னால் போக முடியாத சூழ்நிலை இருந்தது. சாலை ஓரத்தில் ரோடடு புறம்போக்கில் கடை வைத்துள்ளேன் என்றறல் சரிதான். வாடகைக்கு தான் கடை வைத்துள்ளேன். ஏதாவது சம்பவம் நடந்தால் பொதுவாக சாடசியம் அளிக்க கேட்பார்கள் என்றால் சரிதான். இதுஏதேச்சையாக நடந்தது. என் டீக்கடை பக்கத்தில் ஹைவேஸ் லைட் உள்ளது, அது நல்ல வெளிச்சமாக இருக்கும். நான் கடையில் இருக்கும்போது கார் திரும்பி போனது என்றால் சரிதான். இந்த சம்பவம் நடக்கும்போது இரவு 7 மணி இருக்கும். காரில் இருந்த நபர்கள் யாரையும் எனக்கு தெரியாது. நான் வழக்கமாக புறம்போக்கு நிலத்தில் கடை நடத்தி வருவதால் அடிக்கடி கடையை காலி செய்ய தொந்தரவு செய்வார்கள் என்றாலும், அந்த தொந்தரவு தாங்காமல் போலீசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பேன் என்றால் சரியல்ல.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

Name :திரு.கே.மணி அ.சா.10 LW.14

Father's Name : குழந்தைவேல்

Village : பஜனைக்கோவில் தெரு, திண்டிவனம்

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Time : 12.40 pm – 1.07 pm

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 03rd day December 2021.
03.12.2021
முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் திண்டிவனத்தில் மோகன் ஸ்டுடியோ என்ற போட்டோ கடையில் வேலை செய்து வருகிறேன். 21.1.2017 அன்று ரோஷனைக்காவல் ஆய்வாளர், மோகன் ஸ்டுடியோவில் உள்ள எங்கள் ஓனருக்கு போன் செய்தார். நான் அங்கு வேலை செய்து கொண்டிருந்தேன். எங்கள் ஓனர் என்னை போட்டோ எடுப்பதற்கு என்னை அனுப்பினார். நான் பட்டனம் ஏரிக்கு சென்று அழுகிய நிலையில் இருந்த ஒரு பெண் பிரேதத்தை போட்டோ மற்றும் வீடியோ எடுத்தேன். என்னுடைய ஓனர் காவல் ஆய்வாளரிடம் நான் எடுத்த போட்டோ மற்றவைகளையும் கொடுத்தார். என்ன கொடுத்தார் என்று எனக்கு தெரியவில்லை. என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார். நான் எடுத்த போட்டோவை என்னிடம் தற்போது காட்டினால் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் மோகன் ஸ்டுடியோவில் எத்தனை வருடங்களாக வேலை செய்கிறேன் என்றால் ரெகுலராக வேலை செய்வதில்லை, ஓனர் அழைக்கும்போது மட்டும் போவேன். மோகன் என்பவர் எனக்கு போன் செய்தபோது பகல் 12.30 மணிக்கு மேல் இருக்கும். அப்போது போன் செய்து வரவழைத்தார். ஆய்வாளர் மோகனுக்கு போன் செய்த உடனே ஓனர் மோகன் எனக்கு போன் செய்தார். தகவல் சொன்னவுடன் 1, 1.30 மணிக்கு காவல்நிலையம் போய்விட்டேன். சம்பவ இடத்திற்கு போகும்போது சுமார் 1.30 மணி இருக்கும். போலீசார் என்னை கையோடு அழைத்து சென்றார்கள். நான் போகும்போது அந்த இடத்தில் காவல் துறை அதிகாரிகள், தடய நிபுணர்கள் இருந்தார்கள், பொதுமக்கள் கொஞ்சம் பேர் தள்ளியிருந்தார்கள். அந்த புகைப்படத்தை பல கோணங்களில் எடுத்தேன். சுமார் 10 லிருந்து 15 போட்டோ எடுத்திருப்பேன், 15-20க்குள் இருக்கும். வீடியோவை நான் தான் பதிவு செய்தேன். போட்டோ, வீடியோவை பதிவு செய்தபிறகு தான் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். என்னை விசாரிக்கும்போது 2.30 மணி இருக்கும். 2.30 மணி வரைக்கும் அந்த பிரேதம் அங்கு தான் இருந்தது. மோகன் என்பவர் போலீசுக்கு வழக்கமாக போட்டோ எடுப்பவர் என்றால் எடுக்கமாட்டார். அவர் வழக்கமாக எடுப்பாரா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கமாக போலீசாருக்கு போட்டோ எடுப்பவர் என்றாலும், நான் போலீசாருடைய ஆள் என்பதாலும், போலீசார் கேட்டுக்கொண்டதால் ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வாறு போட்டோ எடுத்தால் பில் கொடுப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு மோகன் பில் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | |
|---|---|
| Name | :திரு.கல்யாணசுந்தரம் அ.சா. 11 LW.13 |
| Father's Name | : வேணுகோபால் |
| Village | : 73, பிள்ளையார்கோவில் தெரு, அய்யந்தோப்பு |
| Taluk | : திண்டிவனம் தாலுக்கா |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 30 |
| Time | : 1.07 pm – 1.13 pm |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 03rd day December 2021.
03.12.2021
முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கார் மெக்கானிக் ஷெட் வைத்து வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 2017ம் வருடம், 1வது மாதம், தேதி எனக்கு சரியாக நினைவில்லை. மதியம் 2 மணியளவில் போலீசார் வந்து ஒரு எலும்புகூடு போட்டோவை காண்பித்து தெரியுமா என்று கேட்டார்கள், உங்கள்ஊரில் இதுபோல் யாராவது காணாமல் போய்விட்டார்கள், இவரை பார்த்திருக்கிறீரா என்று கேட்டார்கள். எலும்புகூடு கருகியமாதிரி இருந்தது, அதில் எனக்கு ஒன்னும் தெரியவில்லை. இதுபோன்று எங்கள் ஊரில் யாரும் இல்லை என்று தெரிவித்தேன். என்னை கேட்டு, பெயர்,

விலாசம் எழுதிக்கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு 25ம் தேதி அழைத்தார்கள். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது.

/2/

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தற்போது முதல்விசாரணையில் சொன்ன விவரத்தை தான் என்னை ஆய்வாளர் விசாரணை செய்தபோதும் கூறினேன் என்றால் சரிதான். தேதி, நேரம் சரியாக ஞாபகமில்லை என்றால் சரிதான். என்னிடம் போலீசார் போட்டோ காட்டி விசாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.